## தஞ்சை நாயக்கர் காசு

ஆறுமுக சீதாராமன்,

தஞ்சை நாயக்கர் ஆட்சியைத் தோற்றுவித்த செவ்வப்ப நாயக்கனின் (கி.பி. 1535 - 1690) செப்புக் காசு ஒன்று தஞ்சையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 3.5 கிராம் எடையுள்ள இக்காசின் முன்பக்கத்தில் மணி வட்டத்தின் உள்ளே இடது பக்கம் நோக்கி அமர்ந்த நிலையில் உள்ள காளையின் மேல் சந்திரன், சூரியனும், காளையின் முன் குத்துவிளக்கும் உள்ளது. காசின் பின்பக்கத்தில் வட்டத்திற்குள் இரண்டு வரிகளில் 'சிவாபராய' என்று நாகரி எழுத்தில் உள்ளது.

இந்தக் காசை நோக்கும் போது யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட 'சேது' காசுகளின் தாக்கம் இக்காசில் காணப்படுவது சிறப்பு அம்சமாகும்.



## சேதுபதி காசு

இராமநாதபுரம் சேதுபதி மன்னர் வெளியிட்ட ஒரு செப்புக் காசு திருநெல்வேலியில் கிடைத்துள்ளது. காசின் முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கி நிற்கும் மயிலின் மேல் ஆறுதலைகளுடன் முருகன் அமர்ந்திருக்கும் (ஆறுமுகப் பெருமான்) காட்சி அழகாக உள்ளது. காசின் பின்பக்கத்தில் 'செதுபதி' என்று கி.பி.17 ஆம் நூற்றாண்டு தமிழ் எழுத்தில் உள்ளது. காசின் எடை 1.4 கிராம்.

தென்னிந்தியாவில் முருகன் உருவம் பொறித்த காசுகளை பல மன்னர்கள் வெளியிட்டுள்ளனர். ஆனால் ஆறு தலைகளுடன் முருகனை காசுகளில் வெளியிட்டவர்கள் சேதுபதி மன்னர்களே ஆவர்.



## காரைக்கால் அம்மையாரும், இராஜராஜன் காசும்

இராஜராஜ சோழனின் (கி.பி. 985 - 1014) அரிய செப்புக்காசு ஒன்று மயிலாடுதுறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 4 கிராம் எடையுள்ள இக் காசின் முன்பக்கத்தில் மனிதன் நின்ற நிலையிலும், மனிதனின் வலது கையின் கீழ் காரைக்கால் அம்மையார் நின்ற நிலையில், தலைமுடி விரிந்த கோலத்திலும் உள்ளது. காசின் பின்பக்கத்தில் மனிதன் அமர்ந்த நிலையிலும், இடது கையின் கீழ் **'ஸ்ரீ ராஜராஜ'** என்று நாகரி எழுத்திலும் உள்ளது.

தமிழகத்தில் கிடைத்த இராஜராஜன் சோழன் காசுகளில் நிற்கும் மனிதனின் வலது கையின் கீழ் குத்துவிளக்கு காணப்படும். ஆனால் இந்தக் காசில் காரைக்கால் அம்மையாரின் உருவம் கோட்டு வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் காரைக்கால் அம்மையாரின் செப்புத் திருமேனி திருவாலங்காட்டிலும், கற்திருமேனி கங்கைகொண்ட சோழபுரத்திலும் காணப்படுகின்றது. தமிழகத்தை தவிர இலங்கையிலும் காணப்படுகின்றது. இராஜராஜன் சிறந்த சிவ பக்தனாக இருந்தமையால் தன்னுடைய காசில் காரைக்கால் அம்மையாரை பொறித்து சிறப்பு வெளியீடாக வெளியிட்டு இருக்கலாம்.

காரைக்கால் அம்மையார்



## வேதாரண்யத்தில் கிடைத்த சேது காசுகள்

இலங்கையில் சேது மன்னர்கள், இராமர் தங்களுக்கு கொற்றக் குடையும், ஒற்றைச் சங்கும், காளைக் கொடியும், சேது சின்னமும் அருளிவிட்டுப் போனதாகப் பெருமைப்பட்டும் கொண்டுள்ளனர். இதனை யாழ்ப்பாணப் புலவர் ஒருவர் இயற்றிய **'செகராஜசேகரம்'** என்னும் ஜோதிட நூலும், பிற்காலக் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன. சோழர் கல்வெட்டுக்களில் **'ஸ்வஸ்திஸ்ரீ'** என்று காணப்படும் சொற்றொடருக்கு ஈடாக **'சேது'** என்பதை இலச்சினை எடுத்துக்களாக யாழ்ப்பாணத்து அரசர்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என்பது அவர்கள் வெளியிட்டுள்ள நாணயங்களிலிருந்தும் **'கொட்டகாமா'** என்னும் இடத்தில் உள்ள கல்வெட்டிலிருந்தும் தெரியவருகிறது. யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் **'சேது'** என்று பொறிக்கப்பட்டுள்ள காசுகள் பல ரகங்களில் கிடைத்துள்ளன. தமிழகத்தில், தஞ்சை மாவட்டம் வேதாரண்யத்தில் மூன்றுவகை செப்புக் காசுகள் முதல் முறையாக கிடைத்துள்ளது. இந்தக் காசுகளின் எழுத்தமைதி கி.பி. 13ஆம் நூற்றாண்டாகும்.

முதல் வகை காசின் முன்பக்கத்தில் மனிதன் நிற்கும் உருவமும், பின்பக்கத்தில் மனிதன் அமர்ந்த உருவமும், இடது பக்கத்தில் **'சேது'** என்ற தமிழ்ச் சொல்லும் காணப்படுகிறது.

இரண்டாவது வகை காசின் முன்பக்கத்தில் மனிதன் நிற்கும் உருவமும், இடது பக்கம்

ஒரு காளை அமர்ந்திருக்கும் நிலையிலும், பின்பக்கத்தில் உட்கார்ந்த மனித உருவமும், இடது பக்கத்தில் **'செது'** என்று தமிழ் எழுத்தும் காணப்படுகின்றது.

மூன்றாவது வகை காசின் முன்பக்கத்தில் மனிதன் நிற்கும் உருவமும், இடது பக்கத்தில் ஒரு சூலமும், அதன் பக்கத்தில் ஒரு வேலும் காணப்படுகின்றது. பின்பக்கத்தில் அமர்ந்த நிலையில் ஒரு காளையும், காளையின் மேலே பிறையும், காளையின் கீழே **'செது'** என்று தமிழ் எழுத்தும் காணப்படுகின்றது.

இலங்கையில் யாழ்ப்பாணப் பகுதியில் ஆட்சி செய்த சேது மன்னர்கள் **'சேது'** என்ற மங்கலச் சொல்லை மட்டும் பயன்படுத்தி உள்ளார்கள். இந்தக் காசுகள் வேதாரண்யத்தில் கிடைத்திருப்பதால் தமிழகத்திற்கும், யாழ்ப்பாணத்திற்கும் இருந்த வணிகத் தொடர்பை மெய்ப்பித்துக் காட்டுகிறது.

முதல் வகை : ~



இரண்டாவது வகை : ~



மூன்றாவது வகை : ~

